# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**

ஆணை நாள் 17.11.2020

**முன்னிலை**

## முனைவர் ரா.பிரதாப்குமார்

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 358/B/20**

திரு எல். சுப்பிரமணியன் — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வாலாஜாபாத் வட்டார வளர்ச்சி அலுவலகம்,
காஞ்சிபுரம் மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

**ஆணை**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (17.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திரு எல். சுப்பிரமணியன் மற்றும் பொது தகவல் அலுவலர், திருமதி ந. பவானி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர், வாலாஜாபாத் வட்டார வளர்ச்சி அலுவலகம், காஞ்சிபுரம் மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 10.10.2019 தேதியிட்ட மனுவில், ஆழ்துளை குழாய் இருக்கும் இடத்தில் செப்டிக் டேங்க் அமைக்கலாமா என்பதன் விவரங்கள் தொடர்பாக வாலாஜாபாத் வட்டார வளர்ச்சி அலுவலக பொது தகவல் அலுவலர் அவர்களுக்கு மனு செய்துள்ளார்.

3. தகவல்கள் வழங்கப்படாததால் மனுதாரர், 15.11.2019 தேதியிட்ட மனுவில் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார். முழுமையான தகவல்களை பெற்றுத் தருமாறு தெரிவித்து, மனுதாரர் 08.01.2020 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டின் அடிப்படையில் தொலைபேசியின் வாயிலாக இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர் தனக்கு இதுவரை எந்தவித தகவல்களும் வழங்கப்படவில்லை என்றும், ஆணையத்திலிருந்து தொலைபேசியின் அழைப்பு வந்த பிறகு தான் என்னுடைய மனுவின் மீது முழுமையற்ற தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது என்றும், தான் கோரிய இனங்களுக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தான் தகவல் தெரிவித்துள்ளாரே தவிர, என்னுடைய மனுவின் மீது எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை என்றும், தகவல் வழங்காத பொது தகவல் அலுவலர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், வாதத்தின்போது ஆணையத்தில்

தெரிவித்தார். இன்றைய விசாரணையில் ஆஜரான பொது தகவல் அலுவலர், கால அவகாசம் அளிக்கும்பட்சத்தில் 2 நாட்களுக்குள் தகவல்களை மனுதாரருக்கு வழங்கிவிடுவதாக தெரிவித்து, மின்னஞ்சல் மூலம் ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மேற்படி பொது தகவல் அலுவலரின் தகவலையும், மனுதாரர் மனுவின் மீது விரைவில் நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளதையும் ஆணையம் பதிவு செய்து, மேற்சொன்ன மனுதாரர் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் ஆகியோர் பேசப்பட்ட வாதங்களை பரிசீலனை செய்து இன்றைய விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட ஆணைகள் வழங்கப்படுக்கின்றன:-

1. **சட்டப்பிரிவு 7ன்படி விண்ணப்பத்தை பெற்ற 30 தினங்களுக்குள் மனுதாரர் கேட்டுள்ள தகவல்களை முழுமையாக பொது தகவல் அலுவலர் தரக் கடமைப்பட்டவராவார். இந்நிலையில் அப்போதைய பொது தகவல் அலுவலர் ஏன் 30 தினங்களுக்குள் தகவலை மனுதாரருக்கு வழங்க தவறினார் என்பதற்கும் காலதாமதமாக தகவல் ஏன் அளிக்கப்பட்டது என்பதற்கும் அப்போதைய பொது தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 20(1)ன்கீழ் அதிகபட்ச தண்டமாக ரூ.25,000/- ஏன் விதிக்கக் கூடாது என்பதற்கு அவரது எழுத்து மூலமான விளக்கங்களை அவரிடமிருந்து இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் பெற்று இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு இன்றைய விசாரணையில் தொலைபேசியின் வாயிலாக ஆஜரான பொது தகவல் அலுவலர், திருமதி ந. பவானி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர், வாலாஜாபாத் வட்டார வளர்ச்சி அலுவலகம், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களுக்கு இதன்மூலம் ஆணையம் உத்திரவிட்டு, மனுதாரர் கோரியுள்ள தகவல்கள் அவருக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில் இவ்வழக்கின் விசாரணை முற்றாக்கப்படுகிறது.**

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 358/B/20</u>**

**<u>பெறுநர்</u>**

பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வாலாஜாபாத் வட்டார வளர்ச்சி அலுவலகம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

திரு எல். சுப்பிரமணியன்,
துணை ஆட்சியர் (ஓய்வு),
நெ.69-ஏ, நடுத்தெரு,
அய்யன்பேட்டை & அஞ்சல்,
வாலாஜாபாத் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

Copy to: File
SCPA-19.11.20